# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Website : www.tneo.gov.in


**முன்னிலை: திரு.ஆ. தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல் முறையீட்டு மனு எண்.59 /2015**

திரு. V. முருகன்,
த/பெ V. வெள்ளைச்சாமி,
பிளாட் எண்.17, கதவு எண்.2/599,
நந்தவனம் பகுதி–4,
கோகுல் நகர் சாலை,
ஒசூர் ........மேல் முறையீட்டாளர்

எதிர்

மேற்பார்வை பொறியாளர்,
கிருஷ்ணகிரி மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
தருமபுரி – 636 705. ......... எதிர்மனுதாரர்

**ஆணை நாள் : 07–10–2015**

1. திரு. V. முருகன் த/பெ V. வெள்ளைச்சாமி, ஒசூர் அவர்களின் 16.7.2015 நாளிட்டமனு மேல்முறையீட்டு மனு எண்.59/2015 ஆக பதிவு செய்யப்பட்டது.

2. மேற்கண்ட மனுவில் மேல்முறையீட்டாளர் அவரது மின் இணைப்பு எண். 063–007–3951ல் உள்ள மின்னளவி பழுதுகாரணமாக அவரிடமிருந்து அதிகமாக வசூலிக்கப்பட்ட மின்கட்டணத்தை இனிவரும் காலங்களுக்கான பில்லில் கழித்து தரவேண்டும் என்று முறையீடு செய்துள்ளார்.

3. மேற்கண்ட முறையீட்டின் நகல், மேற்பார்வை பொறியாளர், கிருஷ்ணகிரி மின்பகிர்மான வட்டத்திற்கு இசைவிணக்கம் எதுவும் ஏற்படவில்லையெனில் பதிலுரையை சமர்ப்பிக்கும்படி 24.7.2015 நாளிட்ட மின்குறைதீர்ப்பாளரின் கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டது.

4. மேற்பார்வை பொறியாளர், கிருஷ்ணகிரி மின்பகிர்மான வட்டம் அவர்கள் தன்னுடைய ....7.2015 நாளிட்ட கடிதத்தில் மின்நுகர்வோர் அதிகமாக கட்டியுள்ள மின் கடடணம் ரூ.4882/—ஐ மின்நுகர்வோரின் வருங்கால மாதாந்திர கட்டணத்தில் சரிசெய்து கொடுக்கும்படி செயற்பொறியாளர்/ஒசூர் அவர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

5. மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 14.10.2015 அன்று கேட்புரை மின்குறைதீர்ப்பாளர் முன்பாக நடத்தப்படும் என்று 14.9.2015 நாளிட்ட கடிதத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டது. மேல்முறையீட்டாளருக்கு அனுப்பிய கடிதம் Door Locked என்ற வாசகத்துடன் திரும்பவும் மின்குறைதீர்ப்பாளர் அலுவலகத்தில் பெறப்பட்டுவிட்டது.

6. மேல்முறையீட்டாளர் திரு. V. முருகன் அவர்கள் தன்னுடைய 1.10.2015 நாளிட்ட கடிதத்தில் வரும் மாதத்தில் கணக்கீடு செய்யப்படும் மின் கட்டணத்தொகைக்கு ரூ.4882/—ஐ ஈடுகட்டப்படும் என்று உதவி பொறியாளர்/இபே/தெற்கு பிரிவு, ஒசூர் அவர்களால் தெரிவிக்கப்பட்டு 08/2015 மாத மின் கடடணம் அதில் கழிக்கப்பட்டுவிட்டது என்று தெரிவித்து தன்னுடைய மனுவை ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார். அவரின் கடிதத்தின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"எனக்கு சொந்தமான மின் இணைப்பு எண்.063—007—3951 ல் கடந்த 02/2014, 04/2014 மற்றும் 06/2014 மாதங்களில் மின் அளவு கருவி பழுதடைந்து கூடுதலாக கட்டிய கட்டணத்தை திரும்ப பெறுவதற்கு தங்களுக்கு 16.7.2015 அன்று கடிதம் அனுப்பியதில் என் மனுவின் மீது உரிய நடவடிக்கை எடுத்து உதவி பொறியாளர்/இபே/தெற்கு பிரிவு/ஒசூர் அலுவலகத்திற்கு 4882/—யை வரும் மாதத்தில் கணக்கீடு செய்யப்படும் மின் கட்டண தொகைக்கு ஈடுகட்டப்படும் என்று அறிவுறுத்தல் பெயரில் 8/2015 மாத மின் கட்டண தொகையில் கழித்து*

*கொடுக்கப்பட்டது என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, நான் அனுப்பிய மனுவை ரத்து செய்யுமாறு தங்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்."*

7. மேற்கண்ட கடிதத்தினை கூர்ந்து படிக்கும்பொழுது நாம் அறிவது மேல்முறையீட்டாளரின் மனுவின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு அவரது மின் இணைப்பு எண்.063–007–3951இன் கணக்கில் ரூ.4882/– வரவு வைக்கப்பட்டுள்ளது என்று தெரிகிறது.

8. மேற்கண்ட கடிதத்தில் மேல்முறையீட்டாளர் அவர் அனுப்பிய மனுவை ரத்து செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளதால் மேல்முறையீட்டு மனு எண்.59/2015, தள்ளுபடி செய்யப்படுகிறது என்று தீர்வு செய்யப்படுகிறது.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறை தீர்ப்பாளர்

பெறுநர்
1) திரு. V. முருகன்,
த/பெ V. வெள்ளைச்சாமி,
பிளாட் எண்.17, கதவு எண்.2/59,
நந்தவனம் பகுதி–4,
கோகுல் நகர் சாலை, ஓசூர்

2) மேற்பார்வை பொறியாளர்,
கிருஷ்ணகிரி மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
தருமபுரி – 636 705.

3) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
கிருஷ்ணகிரி மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
தருமபுரி – 636 705.

4) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

5) செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர், சென்னை – 600 008.

6) உதவி இயக்குநர் (கணினி) – மின்குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.